உ

சிவமயம்.



பரித்தியினால் வந்த
பஞ்சத்தின் சிந்து.

இஃது

அநேகர் வேண்டுகோளின்படி

சென்னை

மகா-ள-ள-ஸ்ரீ பரசுராம முதலியார் குமாரர்

வைத்தியர்

ப. ஏகாம்பர முதலியார்

அவர்களால் இயற்றப்பட்டு,

மதுரை புதுமண்டபம் புஸ்தக்ஷாப்

நாகலிங்கம்பிள்ளை குமாரன்

பழனிச்சாமிப் பிள்ளையால்

மதுரை அஷ்ட லக்ஷ்மி விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1920.

உ

சிவமயம்.

விநாயகர் விருத்தம்

ஆதியே அருளே உந்தன் அடியிணை தொழுதேன் யானும்
சோதியாய் பருத்திவந்து அயர்மிகும் பஞ்சமென்று
நீதியா உலகத்தோர்க்கு நிகழ்த்துவேன் யிடையூறின்றி
காதினில் குழைகள்சூடும் கரிமுகன் காப்பதாமே.

கரூர் நேட்டிவ் டாக்டர் B. கிருஷ்ணசிங் அவர்கள் இயற்றிய சாற்றுக்கவி:

விருத்தம்.

அம்புவிதனிலே பருத்தி அதினாலே வந்தகஷ்டம்
வெம்பிடச் செய்ததிந்த மேதினிமாந்தர் கஷ்டம்
எம்பிரான் அருளால்நீங்க ஏகாம்பர முதலியாரவரும்
இன்புறு சிந்தாய்ப்பாடி இகத்துளோர் மகிழச்செய்தார்.

கதையின் விபரம்

கண்மணியே உந்தனுக்கு கலியாணம் வந்திட்டதுயென்றமெட்டு

காரணா மூலப்பொருளே கற்பகமே உனை தொழுதேன்
சீரண வாக்கருள்வாய் செல்வநல்ல கணபதியே
தாயே சரஸ்வதியே சரணமென்று நான்பணிந்தேன்
சேயனுட நாவுதனில் சீர்மையுடன் வரமருள்வாய்:

(1) இந்தியாதேசத்திற்கு பஞ்சமது வந்தவிதம்
அந்தருள்ள சுந்தரியே அற்புதத்தை கேள்மயிலே (

(2) பருத்தியிந்தியா வந்தவுடன் பயிரிடவே தெரியாமலே
திருத்தமுண்டத்தைப்போலே அலைந்தாரோடி சிலமனித

(3) வேட்டிவே கவுண்டா
போட்டோம் பார்

(4) இட்டதொரு பரித்திதன்னில் என்னபலன் கண்டாரய்யா
திட்டமுடன் எந்தனுக்கு தெரியசொல்ல வேண்டுமையா (ந)

(5) ஏக்கருக்கு ரூபா நானூர் எடுத்தாரோடி பரித்திதன்னால்
ஊக்கமுடன் காட்டையெல்லாம் உழுதுபரித்திநட்டாரோடி

(6) இன்னைக்கே பரித்திநட்டு என்னைக்கது பூக்குமென்று
புண்ணைக்காரரெல்லாம் பார்த்துபார்த்து துடிப்பாரோடி (ந)

(7) அங்கும்கண்டால் பரித்தி யிங்கும்கண்டால் பரித்தி
எங்கும்கண்டால் பரித்தி பொங்கிதுவும் பூத்ததோடி (ந)

(8) பூத்தபரித்திகண்டு புரப்பட்டார்கள் வியாபாரிகள்
பார்த்து மனங்களித்தார் பயிரிட்டதோர் சமுசாரிகள் (ந)

(9) என்பரித்தி பிடியுமென்பான் சின்னசாமி கவுண்டனுமே
என்பரித்தி பிடியுமென்பாள் சின்னமொட்டெ கவுண்டசியும்

(10) சங்கதியைதெரிந்துகொண்டார் சமத்துள்ளதோர் வியாபாரிகள்
கொங்கனுங்கள் யென்றுசொல்லி கொள்ளையடித்தவர்வெகுபேரடி

(11) நல்லகொள்ளையடித்தாரோடி சொல்லிமுடியாதுபோடி
வல்லவர்கள்தெலுங்குசெட்டி வியாபாரத்தில்தேர்ந்தவர்கள்

(12) வார் அங்கு நடக்குதென்பார் நூருநூராகொள்ளையடித்தார்
தாருமாரா ராத்தல்களை வேருவேராமாத்திக்கொள்வார்(ந)

(13) ஆதியில் ராத்தல்விலை அன்னமேடி ஒத்தரூபா
சோதியான பரித்திதன்னால் சுந்தரமே ஐந்துரூபா (ந)

(14) ஐந்துரூபா சொன்னவுடன் அவன்பதிலும் பேசாமலே
குஞ்சிரிப்பு சிரித்துக்கொண்டு கொடுத்திடுவார்ரூபாதன்னை()

(15) ராத்தல்களை கொண்டுபோயி ரகசியமாய் பேர்த்துவிட்டு
சுத்துரெண்டு வெட்டிவிட்டு சொகுசாயதை வைத்துக்கொ

(16) ஒருமனுவைதூக்கிபார்த்தால் அரமனுவுதானிருக்கும்[ள்வார்
ஒருவருக்கும் தெரியாமலே உள்களவாய்வைப்பாரோடி(ந)

(17) பத்தாயிரம் லட்டாயிரம் பாங்கிகொள்ளையடித்ததுபோல்
சற்றிரக்கமில்லாமலே சம்பாரித்தார் பரித்திதன்னால் (ந)

(18) தவண்டனுங்கள் யாபாரத்தில் கண்மணியேபுகுந்திட்டார்கள்
பவண்டன் நல்லபேனுக்களை பாக்கெட்டிலேசொருகலானர்

(19) வியாபாரத்தில்தேர்ந்தவர்போல் வீதிதன்னில்வருவாரோடி
ஆயாசமில்லாமலே அதட்டி அய்யா காப்பியென்பார் (ந)

(20) டீ, காப்பி குடிப்பாரோடி தெருத்தெருவா அலைவாரோடி
டை கழுத்தில்கட்டிகொள்வார் சர்ட்டுகோட்டுமாட்டிகொள்

(21) காசாசை அதிகமில்லை கருப்பாகவுண்டா கூசையர்க்கு[வார்
நேசர்களை கண்டிட்டாலே ஆசையுடன் உபசரிப்பார் (ந)

(22) அந்தய்யர் கடைக்குபோனால் சொந்தமான நெய்யிட்டாங்
சந்தோஷமாய்பேசிக்கொண்டு சகலபேரும வாங்கிதின்பார்

(23) கூசையர் கடைக்குபோனால் தோசைநல்லதாயிருக்கும்
ஆசைமிகக்கொண்டுமே தோசைபத்து தின்பாரோடி (ந)

(24) காப்பிக்கடைக்குள்வந்தால் கண்மணியேசொல்கிறேன்கேள்
ஜேப்புதனில் கையைபோட்டு நோட்டெடுத்துதருவாரடி (ந)

(25) நோட்டெடுத்துகொடுத்துவிட்டுகேட்டதெல்லாம் தாருமென்
வாட்டமில்லாமலுமே வகைவகையாய்வாங்கிதின்பார் [பார்

(26) அந்தயிட்டாய் தாருமைய்யா இந்தயிட்டாய் தாருமைய்யர்
நெந்தயிட்டாய்நல்லதய்யா யெனக்குஅதைசொல்லுமைய்யா

(27) காரக்கடலை ஓமப்பொடி காராபூந்தி பக்கவடா
நேராநெய்யில் செய்ததப்பா நேசர்களுக்கானதப்பா (ந)

(28) எசன்ஷ்கர்ப்பியென்பான் யில்லையென்றால்ஏக்கங்கொள்வான்
நான்ஷன்ஸ் டீ உதவாதென்பான் நல்லதண்ணீர்தாருமென்

(29) சந்தனபொட்டு நெத்தியில் சரியாய் ஆறுகாசகலம் [பான்
சந்தோஷமாய் வைத்துக்கொள்வார் சமத்துகளைபேசித்துள்வார்(ந)

(30) பரித்திவிலை யிறங்கிப்போச்சு சருத்துமிககுறைந்துபோச்சு
வருத்தம்வந்துநேர்ந்துபோச்சு வாசபடியில் குந்தலாச்சு (ந)

(31) பரித்தியுடமுகவுதன்னால் பஞ்சமது தோணவில்லை
அரிசியில்லை யிருக்கதென்று வருத்தப்பட்டு அழுகிறார்கள் (ந

(32) கருருமாரியம்மா கைதொழுது நிதம் பணிந்தேன்
ஐருரா பரித்திவிந்தால் சாவல்வெட்டி பலியிடுவேன் (ந)

(33) லாடன் பரித்திதன்னுல் கேடுவந்து நேர்ந்ததம்மா
பாடுபட்டு சேகரித்து பாவினுனும் கெட்டேனம்மா (ந)

(34) செட்டுசெய்த பரித்தியது சரியில்லையாய் விந்துவிட்டால்
திட்டமுடன் உந்தனுக்கு எட்டுகடா வெட்டுவேனம்மா (ந)

(35) நுந்திநிதம் பார்ப்பாரோடி தலைகுனிந்து அழுவாரோடி
சிந்தைமிககலங்குவார்கள் தெருத்தெருவாய் அலைவார்கள் ()

(36) பாருலகில் யினிமேலேதான் பருத்திநடலாகாதென்று
காருண்யமுள்ளதொரு கவர்மெண்டார் ஆர்டரோடி (ந)

(37) ஏகாம்பரம் சொன்னதினுல் ஏதொன்றும் பிசகல்லடி
பாகர்ந்த மொழியணங்கே பாவையரே கேளுங்கடி (ந)

வேட்டுவண்டி ஜாதியிலே நானும் என்றமெட்டு,

கம்புகஞ்சிகுடிச்ச காலம் போச்சே பரித்தியால்
கம்புகஞ்சிகுடிச்ச காலம் போச்சே யிப்போ
காப்பிக்கடை வந்துமிக டீ குடிக்கலாச்சே (கம்பு)

சோளசோரு தின்ன காலம்போச்சே பரித்தியால்
சோளசோரு தின்ன காலம்போச்சே யிப்போ
சொகுசான நெல்லுச்சோரு தேடபிகலாச்சே (சோ)

சங்குமோதிரம் போட்ட காலம்போச்சே பரித்தியால்
சங்குமோதிரம் போட்டகாலம் போச்சே யிப்போ
சரியான தங்கமோதிரம் போடகாலமாச்சே (சங்கு)

கரிவளையலிட்ட காலம் போச்சே பரித்தியால்
கரிவளையலிட்ட காலம் போச்சே யிப்போ
காப்பு கல்லுகொலுசுகளை கையில் போடலாச்சே (கரிவ)

வேட்டியில்லாதிருந்த காலம் போச்சே பரித்தியால்
வேட்டியில்லாதிருந்த காலம் போச்சே யிப்போ
விதவிதமாய் மல்லெடுத்து கட்டவுமாச்சே (வேட்)

கட்டைவண்டி ஏரும் காலம் போச்சே பரித்தியால்
கட்டைவண்டி ஏரும் காலம் போச்சே யிப்போ
கனமான மோட்டார்கார் ஏரும் காலமாச்சே (கட்)

ஆண் தெம்மாங்கு.

அமரிக்கன் பரித்தியைநான் ஆசைபட்டு வாங்கிவிட்டேன்
குமுருதடி என்மனசு மேகாதையரே என்னசெய்வேன்

6 சிந்து

இனியென்ன செய்வனடி நான நன்ன நன்னு
ஏந்திழையே பெண்மயிலே நான நன்ன நன்னு
சனியனான பருத்தி தன்னால் நான நன்ன நன்னு
சங்கட்டங்கள் வந்ததடி நான நன்ன நன்னு

(பெண்) சொன்னாலும் கேளாமல் துடிதுடித்து வாங்கினீரே
என்ன நம்மாலாகுமைய்யா எல்லாமந்த ஈசன்செயல்

சிந்து ஊராருக்கானதுபோல் நான நன்ன நன்னு
உந்தனுக்கும் ஆகட்டுமே நான நன்ன நன்னு
காருண்யமுள்ள ஈசன் நான நன்ன நன்னு
காத்திடுவார் எல்லோரையும் நான நன்ன நன்னு

(ஆண்) நாட்டுக்கோட்டைசெட்டியாச்சே நாயம்சொன்னால்கேழ்கமாட்டார்
வீட்டைவித்து தாருமென்றார் விசனமாகதோணுதடி

சிந்து விருதுபட்டி போன பரித்தி நான நன்ன நன்னு
வித்துவிடு மென்றிருந்தேன் நான நன்ன நன்னு
ஒருத்தருமே கேழ்பாரில்லை நான நன்ன நன்னு
உத்தமியே யென்னசொல்வேன் நான நன்ன நன்னு

(பெண்) ஆறுவாரம் தவணைசொல்லி அகப்பட்டுக்கொண்டழுகிறீரே
ஊரார் நகைக்கபோறார் உள்ளெழுந்து வாருமையா

சிந்து அழுவதினால் ஆவதென்ன நான நன்ன நன்னு
ஆவதுபோல் ஆகுமைய்யா நான நன்ன நன்னு

பழுதோருக்கால் வாரர்தய்யா நான நன்ன நன்று
பரமசிவன் கார்த்திடுவார் நான நன்ன நன்று

(ஆண்) கொஞ்சமேனும் வட்டிப்பணம் கோதையரே கொடுத்தமானால்
சஞ்சலத்தை செய்யாதேடி சரடுகொஞ்சம் தாருமடி

சிந்து நாணயமே பெரியதடி நான நன்ன நன்று
நகையதுவும் பெரிசல்லடி நான நன்ன நன்று
கோணமல் ஒருமனதாய் நான நன்ன நன்று
கோதையரே தந்திடுவாய் நான நன்ன நன்று

(பெண்) எத்தனைநாள் காத்திருந்தீர் இச்சரட்டை வாங்கிக்கொள்ள
சற்றிரக்கமில்லாமலே சமத்துடனே கேட்டீரய்யா

சிந்து ஈருசுருகாரியாச்சே நான நன்ன நன்று
இப்போநகை கேட்டீரே நான நன்ன நன்று
ஆனைக்கு புத்திசொன்ன நான நன்ன நன்று
அய்யோ நான் தரமாட்டேன் நான நன்ன நன்று

(பெண்) அத்தையுட கழுத்துதன்னில் ஐந்துபட்டை மின்னலாச்சே
சத்தமுடன் அதையும்வித்து தொலைத்துவிடு வட்டிபணம்

சிந்து சாகப்போர காலத்திலே நான நன்ன நன்று
சட்டமுடன் நகை வேணுமா நான நன்ன நன்று
போதுமையாவாங்கிக்கொண்டு நான நன்ன நன்று
புதுமையிங்கு காட்டாதே நான நன்ன நன்று

(ஆண்) அம்மா நான் என்னசெய்வேன் அவமானம் மாகுதிப்போ
சும்மா நாம் இருந்துவிட்டால் சொத்துகளும் ஜப்தியாகும்

சிந்து அம்மாகொஞ்சம்முன்னால்தாரும் நான நன்ன நன்று
அஞ்சுநாள் பொருத்துதாரேன் நான நன்ன நன்று
கம்மென்று இருக்குரியே நான நன்ன நன்று
கழட்டி ஜல்தி தாருமம்மா நான நன்ன நன்று

(கிழவி) பெண்டாட்டியே நகைகேட்டான் போட்டிடுவேல் செருப்பால
முண்டச்சியே நகைகேழ்க முன்வந்துநின்றயோடா [லென்று

சிந்து ஆசிமிஷம் தரமாட்டேன் நான நன்ன நன்று
அப்பப்பா ஆம்பளேயே நான நன்ன நன்று
சிரிக்கியே குடுக்கச்சொல்லி நான நன்ன நன்று
செலுத்திவிடு வட்டிப்பணம் நான நன்ன நன்று

(பெண்) என்ன நீ சொன்னயத்தை யெனக்கு நன்ருய் நேழ்கவில்லை
இன்னமொருதடவைசொன்னலிடித்திடுவேன்தாடைதன்னில்

சிந்து உன்மகளாயிருந்தாக்கால் நான நன்ன நன்று
ஒருநகையும் வாங்கமாட்டாய் நான நன்ன நன்று
அன்னியாளென்றுசொல்லி நான நன்ன நன்று
இந்தவார்த்தை சொல்லவந்தாய் நான நன்ன நன்று

(கிழவி) என்னடி சிரிக்கி ரொம்ப ஏத்தமிக பேசுகிருய்
சின்னபயல் வரட்டுமிங்கே செருப்பாலேயே அடிக்குறேனன்

சிந்து பூரணகெற்பமம்மா நான நன்ன நன்று
பேர்ட்டநகை வாங்கலாமா நான நன்ன நன்று
ஆருமில்லா பரதேசியம்மா நான நன்ன நன்று
அவளிடத்தில்சண்டைவேண்டாம் நான நன்ன நன்று

[பொது] இப்படியாக சண்டைபோட்டு யிருக்கின்றதோர் சமயத்திலே
அப்பவேதான் கடன்காரனும் அவசரமாய் வந்துவிட்டான்

சிந்து ஆறுவாரம் தவணை போச்சு நான நன்ன நன்று
அந்ததவாரம் வந்துபோச்சு நான நன்ன நன்று
வாருமையா கடக்கியென்றான் நான நன்ன நன்று
வசப்படியில் குந்திகொண்டான் நான நன்ன நன்று

(ஆண்) பரித்தி அங்கு விக்காததினால் பணம் கொடுக்க டிலையாச்சு
பொருத்துக்கொள்ளும் ஒருவாரம் போங்களையா தருகிறேனான்

சிந்து இருவருமா சண்டைபோட்டார் நான நன்ன நன்று
ஏகப்பட்டம் நாயம் கேட்டான் நான நன்ன நன்று
ஒருவரை புடித்திவிட்டான் நான நன்ன நன்று
ஒத்தாசையாய் பேசுகவென்றான் நான நன்ன நன்று

[பொது] சீருணையில்லாமலே கருப்புவந்து நேர்ந்ததென்று
நாராயணசெட்டியாரும் நன்மையென்றுபாடசொன்னார்

சிந்து கற்றவரும் மற்றவரும் நான நன்ன நன்று
கவிபாருக்க வேணுமைய்யா நான நன்ன நன்று
பெற்றவின்னே மலத்தைவிட்டால் நான நன்ன நன்று
பெருந்தடையையறுப்பதுண்டோ நானநன்னநன்று

கூடிய சீக்கிரம கற்புறு காதலி என்ற ஓர் அற்புத தமிழ் நாவல் வெளியாகும்.